# மாணவர்கள் ஆங்கில மொழியைக் கற்பதில் எதிர்நோக்கும் சவால்கள் தெல்.'. ஹிஜ்ராபுர முஸ்லிம் மகா வித்தியாலய க.பொ.த. சாதாரண தர மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு.

M.N. Fathima[1], H. Akeela[2], P.M.A. Aleeshan[3]
(1) No.9/2,Maberi Junction, Digana, Rajawella, Kandy,Sri Lanka
(2) No.36,Soyurupura,Kirinda,Tissamaharama,Sri Lanka
(1) fathima4g3d@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்** : மனிதகுலத்தின் மிகச் சிறந்த கண்டுபிடிப்பே மொழியாகும். தமது கருத்துக்களை, சிந்தனைகளை தனிநபர்களுக்கிடையேயும், சமூகத்திற்கிடையேயும் பரப்புவதற்கான மிகச் சிறந்த ஊடகம் மொழியாகும். இலங்கையில் பெரும்பாலும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் தொடர்பாடலுக்காக பயன்படுத்தப்படுகின்றன. 'சர்வதேச மொழி' என்ற வகையில் ஆங்கிலமானது இரண்டாம் மொழியாகவே கற்பிக்கப்படுகின்றது; கற்கப்படுகின்றது. இதனால் பாடசாலைக் கல்வியானது ஆங்கிலக் கல்வியை முக்கியப்படுத்தும் நிலையமாக உள்ளது. அவ்வகையில் இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தினைக் கற்றுக்கொள்வதில் மாணவர்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். இச்சவால்களை இனங்கண்டு அவற்றிற்கான தீர்வுகளை முன்வைப்பதே இவ் ஆய்வின் நோக்கமாகும். இன்றுவரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுப் பிரதேசத்தில் இவ்வாறானதோர் ஆய்வு இடம்பெறவில்லை என்பதால் அவ் ஆய்வு இடைவெளியை குறைநிரப்புவதில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் தரவு மூலாதாரங்களைப் பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல் நிலை தரவுகளாக வினாக்கொத்தும் இரண்டாம் நிலை தரவுகளாக மாணவர்களின் பெறுபேறுகள், நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம், ஆய்வு அறிக்கைகள், கட்டுரைகள் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவ்வாறு பெறப்பட்ட தரவுகளில் அளவுசார் தரவுகள் MSword மென்பொருளின் துணையுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. அடிப்படையில் ஆங்கில அறிவு போதாமை,ஏனைய பாடங்களுடன் ஒப்பிடுகையில் ஆங்கிலம் கற்பது கடினம் என்ற மனோநிலை,வாசிப்பு, எழுதுதல், கேட்டல், பேசுதலில் காணப்படும் சிரமங்கள், ஆங்கில இலக்கணம் கடினம்,மேலும், அநேகமான மாணவர்கள் ஆங்கிலத்தில் ஒரு வாக்கியம் அல்லது கட்டுரையினை எழுதுகையில் அதிக பிழைகள் ஏற்படுவதற்கு இலக்கணம் பற்றிய போதிய அறிவின்மையே காரணமாக காணப்படுகிறது. ஆங்கிலம் கற்பதற்கான போதியளவான வளங்கள் காணப்படாமை, ஆங்கிலத்தில் பேசுவதில் காணப்படும் சிரமங்கள், குறைந்தளவிலான புள்ளிகள் பெறுகின்றமை, முழுமையாக ஆங்கில மொழியில் கற்பிப்பதால் விளங்கிக்கொள்ள முடியாமை, கற்பித்தலில் மாணவர்கள் திருப்திகொள்ளாமை போன்ற காரணங்கள் இவ்வாய்வினூடாக அறியப்பட்டுள்ளன. அத்துடன் மாணவர்கள் ஆங்கிலக் கல்வியினை விருத்தி செய்தால் அவர்கள் தம் பரீட்சைகள், கல்வி நடவடிக்கைகள், எதிர்காலத்தை வளமாக்கக் கூடிய நடவடிக்கைகள் அனைத்தையும்

வளமாக்கக் கூடிய வகையில் கொண்டு செல்ல முடியும். இவ்வாறான சில முக்கிய விடயங்கள் இவ் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** ஆங்கிலம், மொழி, கற்றல், சவால்கள்

**அறிமுகம்**

கல்வி என்பது மனித வாழ்வில் இன்றியமையாத ஒன்றாகும். கல்வித்தரத்தை கொண்டே வாய்ப்புகளும் கட்டமைக்கப்பட்டு உள்ளதால் வாய்ப்புகளை பெற்றுக் கொள்ளவும், தங்களது வாழ்வை முன்னேற்றிக் கொள்ளவும் கல்வி அவசியமாகிறது. எந்தவொரு சமூகத்திலும் கல்வி, அந்த சமூகத்தின் பண்பட்ட நாகரீக தோற்றுவாயின் ஊற்றுமூலமாகிறது. சமூக, பொருளாதார, அரசியல், பண்பாடு முதலான துறைகளில் கல்வி முக்கியமான விசைப்படுத்தலாக காணப்படுகிறது. அரசியல் மாற்றங்களோடு தொடங்கப்பட்டு வளர்ச்சி அடைந்து இன்று கல்வியானது மனித சிந்தனையில் ஏற்படுத்தியுள்ள விளைவுகள் பன்மடங்காகி கல்வியின் நோக்கம், பாடத்திட்டம், கற்பித்தல் முறை, பொதுத் தேவை, புதிய நோக்கம் என்பவற்றிற்கு ஏற்ப மாற்றம் பெற்று வளர்ச்சியடைந்து வருகிறது.

உலகனாவிய ரீதியில் சுமார் 7102 மொழிகள் காணப்படுகின்றன (குலசேகரம் சஞ்சயன், 2018). மேலும், 53 நாடுகளின் உத்தியோகபூர்வ மொழியாக ஆங்கிலம் உள்ளதோடு சொந்த நாட்டில் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் ஒரு நல்ல வேலை கிடைப்பதற்கு அல்லது வெளிநாட்டில் பணிபுரியும் வாய்ப்புக்களை பெற்றுத் தருவதில் ஆங்கில மொழி முண்ணனி வகிக்கிறது(British Study Center,(2015), www..british-study.com). ஆங்கில மொழியானது இங்கிலாந்தில் தோன்றிய போதிலும் இன்றைய காலக்கட்டத்தில் அதன் தேவை ஆழமாக உணரப்படுகிறது.உலகில் அதிகமான மக்கள் கற்கும் இரண்டாவது மொழியும் ஆங்கிலமே. அமெரிக்க, பிரித்தானிய நாடுகளின் உலகளாவிய செல்வாக்கும் ஆங்கிலத்தின் தேவையை அதிகரித்துள்ளது. அறிவியல்,மருத்துவம், வணிகத்துறை, கணனிக் கல்வி போன்ற பல்வேறு துறை சார்ந்த அதிகமான நூல்களும் ஆங்கிலத்திலேயே உள்ளன.

இன்று சர்வதேச மொழியாக மதிக்கப்படும் ஆங்கில மொழியின் செல்வாக்கானது, கல்வி மற்றும் நிர்வாக சேவையில் பாரிய செல்வாக்கு செலுத்துகிறது. விரும்பியோ விரும்பாமலோ மாணவர்கள் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறுவது மிக அவசியமாக காணப்படுகிறது. எல்லா நாடுகளிலும் ஆங்கிலம் ஏதோ ஒருவகையில் கற்பிக்கப்பட்டு, கையாளப்பட்டு வருகிறது. சில நாடுகளில் தாய் மொழியாகவும், சில நாடுகளில் இரண்டாம் மொழியாகவும் மற்றும் மூன்றாம் மொழியாகவும் பேசப்பட்டு வருகிறது. இத்தகைய ஆங்கில மொழியை மாணவர்கள் கற்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே பாடசாலை மாணவர்களுக்கு தரம் இரண்டு முதல் சாதாரண தரம் வரை ஆங்கிலத்தை ஒரு கட்டாய பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது.

வாழ்வியல் துறைகள் அனைத்திலும் ஆங்கிலம் பேசுவோரின் ஆதிக்கம் பரந்து, விரிந்து காணப்படுகின்றது. அதனால்,ஆங்கிலப் புலமை மிக மிக அவசியமாக இருக்கிறது.

இலங்கையில் ஆங்கிலேயரின் சரித்திரம் குடியேற்ற ஆட்சிக்காலத்தில் இருந்து தொடங்குகின்றது. கி.பி. 1796 தொடக்கம் 1956 வரையான காலப் பகுதியில் இலங்கையில்

ஆங்கிலமே அரச கரும மொழியாக அமைந்திருந்தது. சுமார் 160 ஆண்டுகள் இலங்கையின் அரச மொழியாக ஆங்கிலம் இருந்த காலத்தில் பாடசாலைக் கல்வியில் ஆங்கிலமே ஆதிக்கம் செலுத்தியது. நகரங்களில் அமைந்த பெரிய பாடசாலைகளில் ஆங்கிலம் போதனா மொழியாக இருந்தது. ஆங்கிலம் கற்றுத் தேறியவர்களுக்கு அரச பதவிகள் கிடைத்தன (சந்திரசேகரம். சோ, கருணாநிதி, 2006).

இலங்கையில் காலத்துக்கு காலம் கொண்டுவரப்பட்ட யாப்பு சீர்திருத்தங்களின் ஊடாக (1921,1923,1931,1943 ஆண்டுகளில்) அக்காலத்தில் இலங்கையின் அரசியல் மாற்றத்திற்கு ஏற்ப கல்விக் கொள்கையிலும் அரசியல் ரீதியான தலையீடுகள் காணப்பட்டு இருந்தாலும் இலங்கையில் சுதந்திரத்தின் பின்னரே பொதுக்கல்வி சீர்திருத்த முன்மொழிவுகள் அரசியல் மாற்றங்களோடு தொடர்புபட்டு காணப்பட்டிருந்தன. ஆயினும், இலங்கையைப் பொறுத்த வரையில் தாய்மொழிக் கல்வி முறையே பெரும்பாலும் பாடசாலைகளில் நடைமுறையில் உள்ளது (திரவியராஜா, 2016).

இன்றைய கல்வி முறையானது, சவால்களை எதிர்கொள்ளும் மாணவர்களை உருவாக்குவதில் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது. எனவே, நவீன கல்வியில் ஆங்கிலம் ஒரு முக்கிய இடத்தை பிடித்துள்ளது. மாணவர்களின் தொடர்பாடல் திறனை அதிகரிக்கும் ஒரு ஆணிவேராக ஆங்கிலம் இன்று காணப்படுகின்றது. உள்ளூர் மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் நண்பர்களோடு உரையாடுவதற்கும் முறைசார் முறைசாரா வேலைகளை செவ்வனே செய்து முடிக்கவும் ஒரு மொழி ஊடகமாக ஆங்கிலம் திகழ்கின்றது. இலங்கையில் இன்று சில உயர் பாடசாலைகளில் ஆங்கில மொழி மூல வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை இதன் முக்கியத்துவத்தை உயர்த்துகின்றது. பல்கலை மட்டத்திலும் பட்டப்படிப்பு, பட்ட பின்படிப்புகளை மேற்கொள்வதற்கும் ஆங்கில மொழி அவசியமாகின்றது. ஏனெனில், இதனூடாகவே மாணவர்களில் பெரும்பாலானோர் தமது கற்கை நெறியை மேற்கொள்கின்றனர். இதனால் மாணவர்களின் தொடர்பாடல் திறன் அதிகரிப்பது மட்டுமல்லாமல் தலைமைத்துவ பண்புகள், ஆளுமை பண்புகள் இயல்பாகவே வளர்ச்சியடைகின்றன. எனவே, ஆங்கில மொழி தற்கால சூழ்நிலையில் மிக அவசியமானதொன்றாகும்.

நவீன உலகில் வேலைகளை இலகுவாக்குவதற்காக கண்டறியப்பட்ட மகத்தான கண்டுபிடிப்பு கணனியாகும். இத்தகைய கணனியை கையாள்வதற்கு ஆங்கிலக் கல்வி மிக அவசியமாகும். மேலும்,பல இன, மத, மொழி பேசும் மக்கள் செறிந்து வாழும் எமது நாட்டில் ஒரு 'பொதுமொழி' மிக அவசியமாகும். பொதுமொழிக் கல்வி தேசிய ஒற்றுமைக்கான ஒரு ஊடகமாக திகழ்கின்றது. இந்நுட்ப முறையினூடாக இனங்களுக்கிடையேயான கலாசார தடைகளை நீக்கி சிறந்த கலாசார உறவை கட்டியெழுப்பலாம்.

மேலும், பிள்ளைகளிடத்தில் ஆங்கில மொழியை ஊட்டுவதில் பெற்றோர்கள் அக்கறையோடு செயற்பட வேண்டும். சில பெற்றோர்களின் கவனயீனத்தாலும், அக்கறையின்மையாலும் மாணவர்கள் பலர் ஆங்கில மொழியில் விருப்பமின்றி வெறுப்புற்று காணப்படுவதை நமது கண்முன்னே காணக்கூடியதாக உள்ளது. தரமான பயிற்சி பெற்ற ஆசிரியர்களை

பாடசாலையில் நியமிப்பது மட்டுமல்லாமல் தெளிவாக கற்பிக்கக் கூடிய வகையில் ஆசிரியர்கள் உருமாற வேண்டும்.

தற்காலத்தில் வாழும் சாதாரண மனிதன் பொது அறிவு நிறைந்தவனாக இருக்க வேண்டும். அந்தவகையில் ஆங்கில பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் சிறந்த பொது அறிவை தருகின்றன. இத்தகைய ஆங்கில மொழியை அலட்சியம் செய்வதை ஆழ்ந்த புலமை உள்ள எந்த கல்விமானும் விரும்பமாட்டான். எந்த வகையில் நோக்கினாலும் முக்கியத்துவம் வாய்ந்த ஆங்கில மொழியை அலட்சியப்படுத்துவதால் பயனேதுமில்லை. ஏனென்றால், பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் அனைவரும் தெரிந்திருக்கவெ வேண்டிய 'பொதுமொழி' ஆங்கிலம் ஆகும். எந்தவொரு நாட்டினருக்கும் ஆங்கில மொழி இன்றியமையாததாகும். ஆகவே "ஆங்கிலம் கற்போம் அகிலத்தை வெல்வோம்". என பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தினை உணர்த்திட வேண்டும்.

பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் ஆங்கில மொழியானது முக்கிய ஓர் இடத்தை வகிக்கிறது.குறிப்பாக பாடசாலைக் கல்வியில் க.பொ.த (சாதாரண தரம்) என்பது மைல்கல்லாகத் திகழ்கிறது.அந்தவகையில், க/தெல்/ ஹிஜ்ராபுர முஸ்லிம் மகா வித்தியாலய க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் ஆங்கில மொழியைக் கற்பதில் எதிர்கொள்ளும் சவால்களை மையப்படுத்திய ஓர் ஆய்வாக இது அமைந்துள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

தற்போதைய இலங்கையின் கல்விச் சூழலை பொருத்தமட்டில் ஆங்கிலக் கல்வியானது முக்கிய பங்கினை வகிக்கிறது. அந்தவகையில் க/தெல்/ ஹிஜ்ராபுர முஸ்லிம் மகா வித்தியாலய க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் ஆங்கில மொழியைக் கற்பதில் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர், என்பதை அடையாளப்படுத்துவதற்காக இவ் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

ஆங்கில மொழியைக் கற்பதில் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் சவால்களையும் அடையாளப்படுத்தல்.

**ஆய்வுப் பிரதேசம்**

தெல்தெனிய பிரதேச செயலக பிரிவிலுள்ள 93 கிராம சேவக பிரிவுகளில் ஹிஜ்ராபுர கிராமும் ஒன்றாகும். இப் பாடசாலை உருவாக்கப்பட்டு 29ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளது. கிராமத்தைச் சூழ்ந்து பல பிரதேசங்கள் காணப்படுகின்றன. இது ஓரளவு பின்தங்கிய கிராமம் ஆகும். இதன் மொத்த சனத்தொகையானது 5500 ஆகும். மேலும்,மொத்தமாக 700 குடும்பங்கள் வாழ்கின்றனர். இவ்வூரிளேயே இப் பாடசாலை காணப்படுகிறது. தெல்தெனிய வலயத்துக்குறிய 1உ தரத்தினைக் கொண்ட முஸ்லிம் பாடசாலையாகும். மேலும்,இது ஓர்


ISBN 978-624-5736-14-0

கலவன் பாடசாலையாகும். இங்கு சுமார் 590 மாணவர்கள் கல்விகற்கின்றனர். இங்கு உயர் தரம் வரையான வகுப்புக்கள் காணப்படுகிறது.

**இலக்கியமீளாய்வு**

இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக ஆய்வு தலைப்புடன் தொடர்புபட்ட நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், வாழ்வியற் களஞ்சியம், குறிப்புகள், சுற்றறிக்கைகள் மற்றும் பல்வேறு ஆவணங்கள் என அனைத்து வெளியீடுகளையும் தேடிக் கண்டுபிடித்து பல்வேறு தலைப்புகளில் இலக்கியமீளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கற்றல் பற்றி அறிஞர்களின் கருத்துக்கள், கல்வியின் நான்கு தூண்கள், கற்றலைப் பாதிக்கும் காரணிகள், இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை கற்கும் போது எதிர்நோக்கும் இடர்பாடுகள், கற்றலில் குறைவான ஆற்றல் உடையோர் போன்றவாறான பல்வேறு விடயங்கள் தொடர்பான நூல்களில் இருந்தும் முன்னைய ஆய்வுகளில் இருந்தும் இவ் இலக்கிய மீளாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுத் தலைப்புடன் தொடர்புடைய நேரடி இலக்கியங்களை பெற்றுக்கொள்வதிலுள்ள சிரமத்தின் காரணமாக இந்த ஆய்வுக்கான துணை இலக்கியங்களான ஆய்வுக் கட்டுரைகள் பயன்படுத்தப்பட்டன. Sameem, M.A.M, " Level of English language proficiency among rural and urban based learners in Sri Lanka" என்ற தலைப்பில் இலங்கையின் நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் கற்கின்ற மாணவர்களது ஆங்கில மொழி தொடர்பான ஆய்வின் போது குறிப்பாக கிராமப்புற பகுதிகளில் மாணவர்களது ஆங்கில மொழியினுடைய திறமை எவ்வாறு காணப்படுகின்றது என்பது தொடர்பாக இவ் ஆய்வு கவனம் செலுத்தியுள்ளது.

Jayasudaraj, M.P.V.K, "A Study on ascertaining the undergratuates perspectives on having exposure in English"என்ற தலைப்பில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்கள் 165 பேரைப் மையப்படுத்தி ஆங்கில மொழியின் தேர்ச்சி தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் (90.91 வீதமான) பல்கலைக்கழக மாணவர்கள் எழுதும் போது சரியாக எழுத்துக்களை பயன்படுத்துவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் எனவும் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறான பிரச்சினைகளைக் களைவதற்கு சிறந்த பயிற்சிகள் மற்றும் கற்பித்தல் சாதனங்கள் என்பன பயன்படுத்தப்பட வேண்டும் என ஆய்வின் தீர்வாக கொண்டமையப் பெற்றுள்ளது.

Lesleikahari, "The teaching and learning of advanced level, English language and communication skills"என்ற தலைப்பிலான ஆய்வானது 7 பாடசாலைகளுக்கு பகிரப்பட்டு தரவுகள் பெறப்பட்டுள்ளது. இவ் ஆய்வினூடாக ஆங்கில மொழியின் கற்பித்தல், கற்றல் நடவடிக்கைகள் ஆசிரியர்கள், மாணவர்களது சாதக பாதகமான செயற்பாடுகளையே நோக்கமாகக் கொண்டு அமைகின்றது என கண்டறியப்பட்டுள்ளது. மேலும், இவ்வாய்வினூடாக அப்பாடசாலைகளுக்கு ELCS specialistஆசிரியர்கள் வேண்டும், எனவும் பாடங்களானது போதுமான நிதிவளம், மூலகங்களைக் கொண்டு உரியமுறையில் கற்பிக்கப்பட வேண்டும் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. Seefa, K.R.F, "A LEARNERS' PERSPECTIVE OF THE CHALLENGES FACED IN LEARNING ENGLISH AS A SECOND LANGUAGE IN POST-CONFLICT SRI LANKA: A CASE STUDY OF THE

MADHU ZONE IN MANNAR DISTRICT" என்ற தலைப்பில் மன்னார்மாவட்டத்திலுள்ள மடுப்பிரதேசத்தில் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்போரை மையப்படுத்திய ஆய்வாக உள்ளது. இது ஒரு பின்தங்கிய கிராமமாகையால் மக்கள் ஆங்கிலம் கற்பதில் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கின்றனர். அதனையே இவ் ஆய்வானது நோக்கியுள்ளது.

'மாணவர்கள் ஆங்கில மொழியைக் கற்பதில் எதிர்நோக்கும் சவால்கள்; க/தெல்/ ஹிஜ்ராபுர முஸ்லிம் மகா வித்தியாலய க.பொ.த. சாதாரண தர மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு' என்ற தலைப்பிலான இவ்வாய்வானது மாணவர்கள் ஆங்கில பாடம் கற்பதில் முகங்கொடுக்க நேரிடுகின்ற சவால்களை கண்டறியும் நோக்கில் அமைந்துள்ளது. மேலுள்ள, ஆய்வுகள் மூலம் இவ் இடைவெளி நிரப்படாதிருப்பதால் அதனை நிவர்த்தி செய்திடும் முகமாக இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

ஆய்வொன்றை மேற்கொள்ளும் போது ஆய்வுடன் தொடர்புடைய தரவுகள் இன்றியமையாததாகும். அந்தவகையில்,''மாணவர்கள் ஆங்கில மொழியைக் கற்பதில் எதிர்நோக்கும் சவால்கள்'' எனும் தலைப்பிலான இவ்வாய்வானது அளவு ரீதியானதும், பண்பு ரீதியானதுமான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பு முறைகளினூடாக இவ் ஆய்வுக்கான விபரங்கள் திரட்டப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவானது வினாக்கொத்து, நேர்காணல், அவதானம், இலக்குக் குழு கலந்துரையாடல் போன்ற முறைகளினுடாக பெறப்பட்டன.

வினாக்கொத்துக்கள், ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களுக்கு நோக்க மாதிரி நுட்ப முறையின் கீழ் 45 மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

45= Student

25 = Girls

20 = Boys

கலந்துரையாடல்கள்

இலக்கு குழு கலந்துரையாடல்கள் - 3

மாணவர்கள் நேர்காணலுக்கு உற்படுத்தப்பட்டனர்.

இரண்டாம் நிலைத் தரவானது, மாணவர்களின் பெறுபேறுகள், நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வு அறிக்கைகள், இணையதளங்கள், கட்டுரைகள் என்பவற்றினூடாக பெற்றுக் கொள்ளப்பட்டன. இவ்வாறு பெறப்பட்ட தரவுகளில் அளவுசார் தரவுகள் MS - ACCESS மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபுகள் ஊடாக விளக்கப்பட்டுள்ளன.

பண்பு சார் தரவுகள் விவரணமுறையிலும் விளக்கப்பட்டுள்ளன.


**தரவுப் பகுப்பாய்வு**

இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்கள் அனைவரும் ஆங்கில மொழியைக் கற்பதற்கு விருப்பமுடையவர்களாக காணப்படுகின்றனர். எனினும்,ஆங்கிலத்தை கற்பதில் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக கூறுகின்றனர். அவற்றில் பெரும்பான்மையானோர் பின்வரும் காரணங்களை சவால்களாக குறிப்பிட்டிருந்தனர்.

- **ஏனைய பாடங்களுடன் ஒப்பிடுகையில் ஆங்கிலம் கற்பது கடினம்**

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் 62%ஆனவர்கள் ஏனைய பாடங்களுடன் ஒப்பிடுகையில் ஆங்கிலம் கற்பது கடினம் எனவும் 38மூ ஆனவர்கள் கடினமில்லை எனவும் கருதுகிறார்கள். ‘கடினம்’ என்று குறிப்பிட்டவர்கள் ஏனைய பாடங்களுடன் ஒப்பிடுகையில் ஆங்கிலம் கற்பது கடினம் என்பதற்கு பின்வருவனற்றை காரணங்களாக குறிப்பிட்டனர்.


- ✓ “ஏனைய பாடங்களைவிடவும் ஆங்கிலம் பிரயோகிப்பது குறைவு.”
- ✓ “ஏனைய பாடங்களைவிடவும் ஆங்கிலம் கற்பது குறைவு.”
- ✓ “சமூக சூழல்களில் புழக்கத்தில் இன்மையால் புரிந்துகொள்வது கடினம்.”




- **வாசிப்பு, எழுதுதல், கேட்டல், பேசுதலில் காணப்படும் சிரமங்கள்.**

ஒரு மொழியினை சிறந்த முறையில் கற்பதற்கு வாசித்தல், எழுதுதல், கேட்டல், பேசுதல் என்பன அடிப்படையான விடயங்களாக காணப்படுகின்றன. வாசித்தல், எழுதுதல், கேட்டல், பேசுதல் போன்றவற்றில் காணப்படும் சிரமங்கள் குறித்த மொழியினை கற்பதற்கு பாரிய சவாலாக அமைகிறது. அவ்வகையில், ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில்,

9%ஆனவர்கள் வாசிப்பிலும், 17%ஆனவர்கள் எழுதுதலிலும், 26%ஆனவர்கள் கேட்டலிலும் 91%ஆனவர்கள் பேசுவதிலும் சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.




**ஆங்கில இலக்கணம் கடினம்.**

ஒரு மொழியினை கற்பதற்கு இலக்கணம் அவசியமாகும். குறித்த மொழியினை சிறந்த முறையில் எழுதுவதற்கும், வாசிப்பதற்கும், பேசுவதற்கும், குறித்த மொழி தொடர்பாக தெளிவினை பெறுவதற்கும் இலக்கணம் துணைபுரிகிறது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனைவரும் ஆங்கில இலக்கணத்தை கற்பதில் பாரிய சவால்களை எதிர் நோக்குகின்றனர். இலக்கணத்திலும் குறிப்பிட்ட பிரிவுகளான காலங்கள், சொல்லதிகாரம், எழுத்தாக்கம், வாக்கியங்கள், முன்னிடைச்சொல், சொல் உச்சரிப்பு போன்ற பகுதிகளை கற்பது சிரமம் என மாணவர்கள் குறிப்பிடுகின்றனர். அவ்வகையில்,


- ✓ 48%ஆனவர்கள் காலங்கள்
- ✓ 60%ஆனவர்கள் சொல்லதிகாரம்
- ✓ 22%ஆனவர்கள் எழுத்தாக்கம்
- ✓ 30%ஆனவர்கள் வாக்கியங்கள்
- ✓ 35% ஆனவர்கள் சொல் உச்சரிப்பு
- ✓ 35% முன்னிடைச் சொல்

போன்ற பகுதிகளைவிளங்கிக் கொள்வது கடினம் எனக் குறிப்பிடுகின்றனர்.




மேலும், அநேகமான மாணவர்கள் ஆங்கிலத்தில் ஒரு வாக்கியம் அல்லது கட்டுரையினை எழுதுகையில் அதிக பிழைகள் ஏற்படுவதற்கு இலக்கணம் பற்றிய போதிய தெளிவின்மையே காரணமாக காணப்படுகிறது. ஆய்வின்படி,

- ✓ 65%ஆனமாணவர்கள் காலங்கள் பற்றிய போதிய அறிவு மற்றும் தெளிவின்மை காரணமாகவும்,
- ✓ 26%ஆனமாணவர்கள் முன்னிடைச் சொல் பற்றிய போதிய அறிவு மற்றும் தெளிவின்மை காரணமாகவும்,
- ✓ 52%ஆன மாணவர்கள் சொல்லதிகாரம் மற்றும் வாக்கிய அமைப்பு பற்றிய போதிய தெளிவின்மை காரணமாகவும்,
- ✓ 13%ஆனவர்கள் நேரடிமொழிபெயர்பில் ஈடுபடுவதாலும்,




ஆங்கிலத்தில் ஒரு வாக்கியம் அல்லது கட்டுரையினை எழுதுகையில் அதிக பிழைவிட காரணங்களாக காணப்படுகின்றன.


- **ஆங்கிலம் கற்பதற்கான போதியளவான வளங்கள் காணப்படாமை.**

தரவுகளின்படி வளப்பற்றாக்குறையும் ஆங்கிலம் கற்பதில் தாக்கம் செலுத்தும் ஒரு காரணியாக காணப்படுகிறது. தளபாடங்கள் இன்மை, ஆங்கிலக் புத்தகங்களின் குறைபாடு, ஆசிரியர் பற்றாக்குறை, நூலகவசதி இன்மை போன்ற வளக் குறைபாடுகள் ஆங்கிலம் கற்பதில் சவாலை ஏற்படுத்துகின்றன.

- **ஆங்கிலத்தில் பேசுவதில் காணப்படும் சிரமங்கள்**

ஆங்கிலத்தில் உரையாடுதல் என்பது அம்மொழியின் தேர்ச்சியில் தாக்கம் செலுத்தும் காரணியாகும். ஆங்கிலத்தில் பேசுவது அம்மொழியில் சிறந்த தேர்ச்சியைப் பெற அவசியமாகின்றது. தரவுகளின்படி, ஆங்கிலத்தில் பேசுவதில் காணப்படும் சிரமங்களாக பின்வரும் காரணிகள் கண்டறியப்பட்டன.

- ✓ 39%ஆனவர்கள் ஆங்கிலத்தில் உரையாடுவதற்குதயக்கம் மற்றும் பயம்.
- ✓ 39%ஆன மாணவர்கள் வகுப்பறைக்கு வெளியே ஆங்கிலம் பேசுவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்காமை.
- ✓ 22%ஆன மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் நண்பர்களுடன் ஆங்கிலத்தில் உரையாடுவது கடினம்.



வகுப்பறையில் ஆங்கிலத்தில் பேசுவதற்கும் கருத்துக்களை முன்வைப்பதற்கும் காணப்படும் தயக்கம் மற்றும் பயம் ஆகியன மாணவர்கள் ஆங்கிலத்தில் உரையாடுவதில் தாக்கம் செலுத்துகிறது. ஆங்கிலத்தில் பேசும் போது அதில் ஏதாவது தவறுகள் நேர்ந்தால் நண்பர்கள் தன்னைப் பார்த்து சிரிப்பார்கள் என்ற எண்ணமே இதற்கு காரணமாகும்.

**முடிவுரை**

இன்றைய காலகட்டத்தில் ஆங்கிலக் கல்வியறிவு என்பது அத்தியவசியமான ஒன்றாக காணப்படுகின்றமையினால், க/தெல்/ ஹிஜ்ராபுர முஸ்லிம் மகா வித்தியாலய க.பொ.த. சாதாரண தர மாணவர்களிடையே அவர்களுடைய எதிர்கால உயர்கல்வி நடவடிக்கைகளையும், ஏனைய கற்றல் சார் தொழிற்பாடுகளையும் சிறப்பான முறையில் கொண்டு செல்ல ஆங்கிலக் கல்வி முக்கிய இடத்தைக் கொண்டுள்ளதனைக் காணலாம்.
இவ் ஆய்வின்படி குறிப்பிட்ட இப் பாடசாலையில் பெரும்பான்மையான மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தில் பின்தங்கியவர்களாக உள்ளமையை அவதானிக்க முடியுமாக உள்ள அதேநேரம், ஆர்வமுள்ள மாணவர்களும் பல்வேறு தடைகளை எதிர்நோக்குவதால் உரிய அடைவினைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இத்தகைய நிலைமைக்கு பல காரணிகள் செல்வாக்கு செலுத்தியுள்ளமை இவ்வாய்வின் ஊடாக காணமுடிகின்றது. அவை, அடிப்படையில் ஆங்கில அறிவு போதாமை,ஏனைய பாடங்களுடன் ஒப்பிடுகையில் ஆங்கிலம் கற்பது கடினம் என்ற மனோநிலை,வாசிப்பு, எழுதுதல், கேட்டல், பேசுதலில் காணப்படும் சிரமங்கள், ஆங்கில இலக்கணம் கடினம்,மேலும், அநேகமான மாணவர்கள் ஆங்கிலத்தில் ஒரு வாக்கியம் அல்லது கட்டுரையினை எழுதுகையில் அதிக பிழைகள் ஏற்படுவதற்கு இலக்கணம் பற்றிய போதிய அறிவின்மையே காரணமாக காணப்படுகிறது. ஆங்கிலம் கற்பதற்கான போதியளவான வளங்கள் காணப்படாமை, ஆங்கிலத்தில் பேசுவதில் காணப்படும் சிரமங்கள், குறைந்தளவிலான புள்ளிகள் பெறுகின்றமை, முழுமையாக ஆங்கில மொழியில் கற்பிப்பதால் விளங்கிக்கொள்ள முடியாமை, கற்பித்தலில் மாணவர்கள் திருப்திகொள்ளாமை போன்ற காரணங்கள் இவ்வாய்வினூடாக அறியப்பட்டுள்ளன.

அத்துடன் மாணவர்கள் ஆங்கிலக் கல்வியினை விருத்தி செய்தால் அவர்கள் தம் பரீட்சைகள், கல்வி நடவடிக்கைகள், எதிர்காலத்தை வளமாக்கக் கூடிய நடவடிக்கைகள் அனைத்தையும் வளமாக்கக் கூடிய வகையில் கொண்டு செல்ல முடியும்.
இவ்வாய்வினை மேற்கொண்டதன் ஊடாக சாதாரண தர மாணவர்களிடையே ஆங்கிலக் கல்வி விருத்தியின்மை கண்டறியப்பட்டுள்ளது. பிள்ளைகளுக்கு ஆரம்ப பாடசாலை முதல் ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை உணர்த்தல், தனியார் துறைகளை மாணவர்கள் நாடாதவாறு பாடசாலை கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்தல், வீட்டுச் சூழலில் பெற்றோர் மற்றும் ஏனைய அனைவரும் ஆங்கில பேசுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தல் மற்றும் ஊக்கப்படுத்தல், ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்தல், கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளை முன்வைக்கின்ற போது

மாணவர்கள் விருப்பத்தோடு எவ்வித சிக்கலும் இன்றி கற்க முனைவர், முக்கியமாக மாணவர்களுக்கு ஆங்கிலம் பேசும் சூழலை ஏற்படுத்திக் கொடுத்து சிறந்த ஆற்றல் மிக்க மாணவர்களை உருவாக்கல் போன்றவற்றை மாணவர்களிடையே ஆங்கிலக் கல்வியை விருத்தி செய்வதற்கான ஆலோசனைகளாக இவ்வாய்வினூடாக கண்டறியப்பட்டுள்ளது.

**உசாத்துணைகள்**


- காசிம்.எம். சுஜப்.(2013).'மாணவர்களின் ஆங்கில மொழி விருத்தி'. Accessed on: 05.05.2013. Retrieved from:
- சந்திரசேகரம், சோ. கருணாநிதி, மா. (2006).'மீண்டும் பயிற்று மொழியாக ஆங்கிலம் (ஒரு விளக்க நிலை நோக்கு)'. கொழும்பு. அகவிழி வெளியீடு.
- சஞ்சயன், கே. (2018). 'இன்று உலக தாய்மொழி நாள்-2018'. Retrieved from: https://www.sbs.com.au/language/tamil/international-mother-language-day-21-february
- மயூறினிவெலிச்சோர்.(2018,நவம்பர்).'இன்றைய உலகில் ஆங்கிலக் கல்வியின் அவசியம்'. Accessed on: 12.11.2018. Retrieved from: Sayanolipavan. http://www.battinews.com/2018/11/ENGLISH.html?m=1
- ஷானுஜா புவனேஸ்வரன். (2020,February 11). 'கல்வியில் தற்கால பிரச்சினைகள்'. Accessed on: 11.02.2020. Retrieved from: By Dicksith http://www.battinews.com/2020/02/blog-post_305.html?m=1
- ஜெயந்தன்யோ.உ.(2020,நவம்பர்).'பொதுக்கல்விசீர்திருத்தமுன்மொழிவுகள்'. Accessed on: Retrieved from: https://ujeyanthanrainbow.blogspot.com/2020/11/blog-post-68.html?m=1
- British Study Centre, (2015). '10 Reasons to Learn English'. Accessed on: 10.06.2018. Retrieved from: https://www.british-study.com/adults/10-reasons-to-learn-english-php
- Pushpakumara, W.M.N.S. "Reviewing of the performance of school candidates". (Max papers.com>1123_s11_ms_21)
- Sameem, M.A.M, "Level of English language proficiency among rural and urban based learners in Sri Lanka". Accessed on: 19.04.2011. Retrieved from: (http://ir.lib.seu.ac.lk/handle/123456789/825)



ISBN 978-624-5736-14-0